செய்திக் குறிப்பு எண்: 019/042023 நாள்: 21/04/2023

## செய்திக் குறிப்பு

### ஜே.ஈ.ஈ தேர்வுக்கான மேம்பட்ட பயிற்சித் திட்டம் (JEE Advanced Training Programme) தொடக்க விழா

தமிழ்நாட்டில் பள்ளியிறுதியாண்டு முடித்த மாணவர்கள் அனைவரையும் அடுத்தக் கட்டமாக உயர்கல்விக்கு அனுப்புவதை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு அரசு 'நான் முதல்வன்' திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இந்தியாவின் சிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான அகில இந்திய அளவிலான ஜே.ஈ.ஈ தேர்வை எதிர்கொள்வதற்கென பயிற்சித் திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் தொடக்க விழா ஏபரல் 21, 2023 அன்று மாலை 4:30 மணிக்கு சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இப்பயிற்சித் திட்டம் ஆண்டுதோறும் நடத்தப்படும். கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்க ஊக்கப்படுத்தப்பட்டனர். தேர்வு எழுதிய 696 பேர்களில் 168 பேர் இரண்டாம் கட்டத் தேர்விற்கு தகுதி பெற்றனர். இம்மாணவர்ககளுக்கு 25 நாட்கள் சென்னையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களில் 20 அரசுப் பள்ளி மாணவர்கள் தேர்வில் தேர்ச்சிப் பெற்று இந்த நிறுவனங்களில் தற்போது பயின்று வருகின்றனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஜே.ஈ.ஈ தேர்வு குறித்த விழிப்புணர்வையும் புரிதலையும் ஏற்படுத்த 2022-23 கல்வியாண்டில் செப்டம்பர் மாதம் முதலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக 3600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஜே.ஈ.ஈ முதற்கட்டத் தேர்வினை எழுதி உள்ளனர். அவர்களில் இரண்டாம் கட்டத் தேர்விற்கு தகுதி பெறும் வாய்ப்புள்ள 274 மாணவர்களை பள்ளிக் கல்வித் துறை இப்பயிற்சிக்கு தற்போது இங்கு வந்துள்ளனர். ஐஐடி பேராசிரியர்கள் உட்பட அந்தந்தப் பாடங்களில் சிறந்து விளங்கும்
ஆசிரியர்கள் நேரடியாக வந்து இம்மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க உள்ளனர். இந்த ஆண்டு 45 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியின் தொடக்க விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு கையடக்கக் கணினிகளை வழங்கி வாழ்த்துரை ஆற்றினார்.

விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களும் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்ச்சியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினரான திருமிகு. தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்.

பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமிகு. காகர்லா உஷா இ.ஆ.ப. முன்னிலையில் நடந்த விழாவில் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் திட்டத்தின் உறுப்பினர் செயலர் திரு. இரா. சுதன் வரவேற்புரை ஆற்றினார். முதன்மைக் கல்வி அலுவலர் திரு. மார்ஸ் உட்பட பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் , பள்ளிக் கல்வித் துறையின் உயர் அலுவலர்களும் பங்கேற்றனர்.

* * * * *